# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 29.09.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.623**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.624**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.625**

4. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் ஆகஸ்ட் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
. **பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.626**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் மில்ரோட்டில் உள்ள வாரச்சந்தையில் (புதியதாக கட்டப்பட்டு வரும் திறந்த வெளி கடைகள் மற்றும் கழிப்பிடம் உட்பட) சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 30.08.2023 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. பின்வரும் விபரப்படி இரண்டு நபர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஏலம் கோரிய ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|
| 1 | திரு.கே.கே.சின்னசாமி<br>த/பெ. குப்புச்சி கவுண்டர்,<br>28/1. சிவசக்தி நகர்,<br>சென்னிமலை ரோடு,<br>பெருந்துறை 638 052<br>94424 34169 | ரூ.13,10,500/– |
| 2 | திரு.என்.வெங்கடாச்சலம்<br>த/பெ. நாச்சிமுத்து,<br>128, பெரியவேட்டுவபாளையம்,<br>பெருந்துறை 638 052<br>99655 64746 | **ரூ.13,11,000/–** |

மேற்கண்ட விபரப்படி இரண்டு நபர்கள் ஏலம் கோரியதில் திரு.என்.வெங்கடாச்சலம் என்பவர் ரூ.13,11,000/–க்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ளார். மேற்படி ஏலத்தொகையானது, கடந்த 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.12,25,000/– ஐ விட ரூ.86,000/– கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.10,09,234/–ஐ விட ரூ.3,01,766/– கூடுதலாகவும் உள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 30.08.2023 ஆம் தேதிய குறிப்பில், முந்தைய வாரச்சந்தை குத்தகைதாரரின் குத்தகை உரிமம் 31.08.2023 ஆம் தேதியுடன் முடிவடைவதால், அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ரூ.13,11,000/–க்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள திரு.என்.வெங்கடாச்சலம் என்பவருக்கு 01.09.2023 முதல் 31.08.2026 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார். அதன்படி நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் திரு.என்.வெங்கடாச்சலம் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க 30.08.2023 ஆம் தேதியில் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வாரசந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.13,11,000/– கோரியுள்ள திரு.என்.வெங்கடாச்சலம் த/பெ. நாச்சிமுத்து என்பவருக்கு அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.09.2023 முதல் 31.08.2026 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்க வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1014/2021/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**பின்னேற்பு வழங்கப்பட்டது .மன்றத்தீர்மானம் எண்.627**

6. நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 44 ( வரி விதிப்பு எண். 057/860) கொண்ட கடைக்கு திரு.எம்.ஆர்.சிவசக்திவேல் என்பவருக்கு 01.04.2020 முதல் 31.03.2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக மேற்படி கடையினை 01.04.2023 முதல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக 10.08.2023 ம் தேதியில் மனு அளித்துள்ளார்.

நகராட்சிக்கு சொந்தமான பழையாஸ்பத்திரி வீதி கடைகளுக்கு வடபுறம் உள்ள மேற்கு பார்த்த ஆட்டிறைச்சி கடை எண். 06 ( வரி விதிப்பு எண். 057/142) கொண்ட கடைக்கு திரு.கே.தினகரன் என்பவருக்கு 01.04.2023 முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், மேற்படி கடையினை 01.09.2023 முதல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக 25.08.2023 ம் தேதியில் மனு அளித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 04.09.2023 ம் தேதிய குறிப்பில், பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 44 ( வரி விதிப்பு எண். 057/860) கொண்ட கடையினை 10.08.2023 ம் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், பழையாஸ்பத்திரி வீதி கடைகளுக்கு வடபுறம் உள்ள மேற்கு பார்த்த ஆட்டிறைச்சி கடை எண். 06 ( வரி விதிப்பு எண்.057/142) கொண்ட கடையினை 01.09.2023 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி இரண்டு கடைகளுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி மேற்படி இரண்டு கடைகளுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். .

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.628**

7. நகராட்சிக்கு சொந்தமான பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 26 (வரி விதிப்பு எண். 057/BD01/00057) கொண்ட கடைக்கு திரு.கே.கவின்பிரசாத் த/பெ. குமார் என்பவருக்கு 15.10.2020 முதல் 14.10.2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது 19.06.2023 ஆம் தேதிய மனுவில், தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், 14.10.2023 முதல் கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக மனு அளித்துள்ளார். வருவாய் ஆய்வர் தனது 04.09.2023 ஆம் தேதிய குறிப்பில் மேற்படி கடையினை 14.10.2023 ஆம் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளலாம் எனவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார். எனவே வருவாய் ஆய்வர் குறிப்பின்படி, பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 26 கொண்ட கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, அனுமதிக்கப்பட்டது 2 , 3, 4 மற்றும் 5 ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**மன்றத்தீர்மானம் எண்.629**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. S.S. Engineerrs, 3/6, Kamadenu Nagar, Vadavalli, Coimbatore – 641041 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 21.09.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamadenu Nagar, Vadavalli, Coimbatore – 641041 அவர்களின் 13.09.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் 21.09.2023 ஆம் தேதியுடன் முடிவடையும் 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ. 630/– என்னும் விலைவிகிதத்திலேயே 30 பள்ளி வேலைநாட்களுக்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளின் தூய்மைப் பணிகளில் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 22.09.2023 ஆம் தேதி முதல் 30 பள்ளி வேலைநாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 630/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.3.59 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.(ந.க.எண்.372/2023/எச்1)

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.630**

9. இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் **(NNT) 2022-23** இல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 15.09.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம்** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 19 தங்கமணி எக்ஸ்டன்சன் பகுதியில் CCTV Camera பொருத்துதல் | 1896000 | **M/s.GV COMMUNICATON** | 0.27 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | **M/s.GSC TECHNOLOGY AND SERVICES** | 1.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 மயூரா நகர் பகுதியில் பூங்கா மேம்பாடு செய்யும் பணி | 300000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.84 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட முத்து நகர் 1 வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 750000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.26 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.45 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.GV COMMUNICATON** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.2 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
5. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் .

**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது 2 ,3 , 4 மற்றும் 5 ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**மன்றத்தீர்மானம் எண்.631**

10. இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் புகை மருந்து தெளிக்கும் இயந்திரத்தில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை புகை மருந்து தெளிக்கும் இயந்திரங்களை பழுது சரிசெய்யும் நிறுவனங்களில் உடன் சரிசெய்து கொள்ளவும், நடப்பு ஆண்டில்

அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25,000/–ற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2272 /2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்ற அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதி பழுதுகளை சரிசெய்யும் நிறுவனங்களில் உள்ளூர் விலை விகிதத்தில் அவ்வப்போது காலதாமதமின்றி சரிசெய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.632**

11. இந்நகராட்சியின் நுண் உர செயலாக்க மையம் (MCC), வளமீட்பு மையம் (RRC), நாய்கின் எரியூட்டும் இயந்திரம் (இன்சினரேட்ர்), பேலிங் இயந்திரம் ஆகிய இயந்திரங்களில், அவ்வப்போது ஏற்படும் சிறு பழுதுகள் மற்றும் உரம் தயாரிக்க தேவைப்படும் பொருட்களான EM –கரைசல் தயாரிக்க தேவைப்படும் மூலப்பொருட்கள் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளும் பொருள்களை வாங்கவும் நடப்பு ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்புற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–ற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2273/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியம் கருதி பழுதுகள் செப்பனிடும் நிறுவனங்களில் அவ்வப்போது சரி செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.633**

12. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2 மரம் அறுக்கும் மிஷின்களில் பேரிங், பிஷ்டன், லைனர் செட், ஆயில் சீல், பெட்ரோல் பில்டர், கிளட்ச் போன்றவைகளை புதியதாக மாற்றி – பழுதுகளை சரி செய்து தரும் பணிக்கு 13.09.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பழுது நீக்கம் செய்து தர விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | ஷாசினி ரீவைடிங் ஒர்க்ஸ்<br>நாகர்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம் – 638452 | ரூ.5000/– |
| 2. | அகில் சர்வீஸ் சென்டர்<br>மொடச்சூர்,<br>கோபிசெட்டிபாளையம் – 638476 | ரூ.4975/– |
| 3. | N.P. தண்டபாணி ரீவைண்டிங் ஒர்க்ஸ்<br>14 மாரியம்மன் கோவில் வீதி,<br>கலிங்கியம் (PO),<br>கோபிசெட்டிபாளையம் – 638453 | ரூ.4950/– |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3 ல் குறிப்பிட்டுள்ள M/S. N.P. தண்டபாணி ரீவைண்டிங் ஒர்க்ஸ் 14 மாரியம்மன் கோவில் வீதி, கலிங்கியம் (PO), கோபிசெட்டிபாளையம் என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி விலை விகிதத்தினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2143 /2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.634**

13. இந்நகராட்சியின் கழிவுநீர் வாகனம் TN 36 AA 4564 – ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வழங்கும் பணிக்கு 20.09,2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பழுது நீக்கம் செய்து தர விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்ஸ்<br>ஈரோடு. | ரூ.24,898/–<br>(GST 18 % உட்பட) |
| 2. | GSC டெக்னாலஜி & சர்வீசஸ்<br>ஈரோடு. | ரூ.26,550/–<br>(GST 18 % உட்பட) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1 ல் குறிப்பிட்டுள்ள M/S. காந்தி மோட்டார்ஸ் ஈரோடு, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி விலை விகிதத்தினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1893 /2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.635**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s S.S. Engineerrs, 3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore – 641041 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்த காலம் 03.10.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 21.09.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் 03.10.2023 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.570/– என்னும் விலைவிகிதத்திலேயே தொடர்ந்து 03.10.2023 முதல் 02.11.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து ஒப்பந்தகாலத்தினை கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின்

ஒப்பந்தக்காலத்தினை 03.10.2023 முதல் 02.11.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு நிர்வாக நலன் கருதி காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.570/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 37 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.6.32/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. **(ந.எண். 0371/2023/எச்1)**

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.636**

15. இந்நகராட்சியின் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் போதுமான குளோரின் உள்ளதா என தினமும் சோதனை செய்திட 5 எண்ணிக்கை குளோரேஸ்கேப் புதியதாக வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.5000/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2256 /2023/எச் 1 )

**அலுவலக குறிப்பு :** 1. மன்ற அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.637**

16. இந்நகராட்சி எல்லைக்குள் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில்

1. பேருந்து நிலையம் 500 LPH Ro Plant
2. தாய் சேய் நல விடுதி 250 LPH Ro Plant
3. அம்மா உணவகம் 250 LPH Ro Plant

ஆகிய இடங்களில் மற்றும் அலுவலக பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் நகராட்சி அலுவலகம் 250 LPH Ro plant ல் சுத்திகரிப்பு கருவி மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி சுத்திகரிப்பு கருவியினை தனியார் மூலம் (28.10.2023 முதல் 27.10.2024) 2023-2024 ஆம் ஆண்டு பராமரிப்பு செய்திட ஆகும் செலவினம் ரூ.1,50,000/-க்கு அனுமதி மற்றும் அதன் உதிரிபாகங்கள் மதிப்பீடு விலை விகிதத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதினை சரிசெய்து கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000/- மொத்த செலவின தொகை ரூ.3,50,000/-ஆகும். இச்செலவின தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.638**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் 2023–24 இன் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.கஎண்.1382/20233/பி1 , நாள்.01.09.2023 கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of MRF 3 MT in weekly shandy at Gobichettipalayam Municipality | 26.00 |
| 2 | Construction of MRF 2 MT in Ramar Extension at Gobichettipalayam Municipality | 17.00 |
| 3 | Supply and delivery of Pulverisor machine 40 HP in Gobichettipalayam Municipality | 6.00 |
| 4 | Providing Thermo censer , Roofing and flooring to incinerator , Non skirt flooring to shredding area at MCC , Exhaust fan 10Nos to both MCC and repairing entrance of MCC in Gobichettipalayam Municipality | 14.00 |
| 5 | Solid Waste Management Outsourcings Workers salary | 25.00 |
| 6 | Supply and delivery of Water Lorry (6000 lit) in Gobichettipalayam Municipality | 28.00 |

மேற்கண்ட பணிகளை 15 வது நிதிக்குழு மானியத்தில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

1.மன்றம் பதிவு அனுமதிக்கலாம் .

2.மேற்கண்ட பணிகளை 15 வது நிதிக்குழு மானியத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.639**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2023-24 திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக கழிவு நீர் ஊர்தி (Cesspool Tankers) வாங்குவதற்கு ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.9192/2022/SBM–1 நாள். 21.08.2023 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of the ULB | Capacity in KL | No | Amount | Central Share | State share | ULB share |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Gobichettipalayam | 6 | 1 | 43.25 | 21.63 | 14.27 | 7.35 |

மேற்படி நிதி ஆதார அமைப்பில் தூய்மை பாரத திட்டம்(SBM– 2.0) திட்டத்தின் கீழ் கழிவு நீர் ஊர்தி (Cesspool Tankers) வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் ,
2. நகராட்சி பங்கு தொகை ரூ.7.35 இலட்சத்தினை பொது நிதியில் செலவிடலாம் .

**அலுவலக குறிப்பு 1மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண். 640**

19. நகரில் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளை வாங்கிக்கொள்ள ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 562 நாள். 25.07.2023 ல் ஒப்புதல் வழங்கியுள்ளதின் பேரில் அரசு இணை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் உத்திரவு கடிதம் எண். 17759/MA.IV(1)/2022–1, Dated : 12.11.2022 மற்றும் கடித எண். 20280/MA.IV(1)/2022–1, Dated : 22.12.2022 ன் படி அரசு கூட்டுறவு நிறுவனமான M/s. Tamil Nadu Multipurpose Indco Service, Thiruchirappali – 620008 அவர்களிடம் TNMSC நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதமான Pyrethrum 2% Extract மருந்து ரூ. 1008 + 18% GST Per Litre, என்னும் விலைவிகிதத்திலும் Temphos Emulsible 50 % EC லிட்டர் மருந்து ரூ. 693.50 + 18% GST Per Litre, என்னும் விலைவிகிதத்திலும் கொள்முதல் செய்யப்பட்டமைக்கு உரிய பட்டியல் தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1708/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்ற அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.641**

20. இந்நகராட்சியில் கொசுகளால் பரவும் நோய்களை கட்டுபடுத்த Indoor Fogging பணி செய்ய 7 எண்ணிக்கையில் Indoor Foggging Machine கள் மற்றும் Gas சிலிண்டர் (Cylendor) – 60 எண்ணிக்கையும் கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 (லட்சம்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2289/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.642**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் விபரப்படியான புதிய கட்டிட பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளபட இருப்பதால் மேற்படி கட்டிடங்களுக்கு (தொழில்நுட்ப அனுமதி) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களிடம் கட்டிட அனுமதி பெற பதிவு பெற்ற பொறியாளர்கள் மூலம் (Registered Engineer) Online இல் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் Autocad இல் வரைபடங்கள் தயார் செய்யவும், இதற்காகும் உத்தேச செலவினம் சுமார் ரூ.2,00,000/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>மேற்கொள்ளப்படும் பணிகளின் விபரம்</u>

1. பழைய பேருந்து நிலைய வணிக கட்டிடம் இடித்து புதியதாக கட்டுதல்
2. நகராட்சி அலுவலகம் புதியதாக கட்டுதல்
3. பழைய பூ மார்கெட் கடையினை இடித்து புதியதாக கட்டுதல்
4. நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக கூடுதல் வகுப்பறை கட்டுதல்
5. முருகன்புதூர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக கூடுதல் வகுப்பறை கட்டுதல்
6. ஜெயராம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அங்கன்வாடி மையம் கட்டுதல்

7. நாய்க்கன்காடு நகராட்சி துவக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் மற்றும் அங்கன்வாடி பழைய மையத்தை இடித்து புதியதாக கட்டுதல்
8. வேங்கம்மையார் துவக்கப்பள்ளியில் வகுப்பறை கூடுதல் கட்டிடம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுதல்
9. வேங்கம்மையார் மேல்நிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் முதல் தளத்தில் கூடுதல் கட்டிடம் கட்டவும் சத்துணவு மையம் கட்டிடம் இடித்து புதியதாக கட்டவும், சீதாலட்சுமிபுரம் பகுதிக்கு அங்கன்வாடி மையம் கட்டவும், SSA இல் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டுதல்
10. மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் புதியதாக கூடுதல் வகுப்பறை கட்டுதல்
11. மொடச்சூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் அங்கன்வாடி மையம் கட்டுதல்

(ந.க.எண்.2288/2023/எப்1)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.643**

(ஒப்பம்)- என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி